
## மாநிலத் திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

## மொழிகள் ஆய்வகம் – Baseline Assessment – வழிகாட்டு நெறிமுறைகள்


ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளின்படி உயர் தொழில்நுட்ப ஆய்வகம் (Hi-Tech Lab) அமைந்துள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலக் கூடிய அனைத்து மாணவர்களும் 12.02.2024 முதல் 20.02.2024 வரை 7 வேலை நாட்களுக்கு மொழிகள் ஆய்வகத்தில் Baseline Assessment செயல்பாட்டினை நிறைவு செய்ய கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளை அனைவரும் தவறாது பின்பற்ற ஏதுவாக இந்த வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாக அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- மாணவர்கள் https://mozhigal.tnschools.gov.in/login என்ற முகவரியினை பயன்படுத்தி உள்ளீடு செய்தல் வேண்டும்.




- உள்ளீடு செய்தபின் மாணவர்கள் Assessment நிகழ்வின் போது பயன்படுத்தும் EMIS Login ID & Passwordஐ பயன்படுத்தி மொழிகள் portalல் Login செய்தல் வேண்டும்.

- Login செய்த பின் Baseline Assessment Buttonஐ Click செய்து வழங்கப்பட்டிருக்கும் பத்து வினாக்களுக்கு பதில் அளித்தல் வேண்டும்.




- வினாக்களுக்கு பதில் அளிக்கும் முன் மாணவர்கள் இந்த Portalலில் வழங்கப்பட்டுள்ள ஒரு நிமிட வழிகாட்டி காணொளியை https://www.youtube.com/watch?v=_qOmhZvlOws பார்த்தல் வேண்டும்.
- ஒரு நிமிட வழிகாட்டி காணொளியை பார்த்த பின்பு மாணவர்கள் 10 வினாக்களுக்கும் தவறாது விடையளித்தல் வேண்டும்.
- அவ்வாறு விடை அளிக்கும் பொழுது ஒரு thin clientக்கு ஒரு மாணவர் அமர்ந்து தனித்தனியாக விடை அளித்தல் வேண்டும்
- Baseline Assessmentல் உள்ள 10 வினாக்களுக்கும் மாணவர்கள் பதில் அளித்த பின் Submit என்ற Buttonனை Click செய்தல் வேண்டும்.
- அவ்வாறு Submit என்ற Buttonனை Click கிளிக் செய்வதன் மூலம் மாணவர்கள் தானாகவே மொழிகள் Portalலிருந்து Auto Logout செய்யப்படுவார்கள்.

- மொழிகள் ஆய்வகத்தில் உள்ள செயல்பாடுகளை மாணவர்கள் முழுமையாக அறிந்து கொள்ள தங்களுடைய EMIS Login ID & Passwordஐ பயன்படுத்தி மொழிகள் Portalக்குள் மீண்டும் Login செய்தல் வேண்டும்.
- ஒரு மாணவருக்கு மதிப்பீடு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட கால அளவு 15 நிமிடம் மட்டுமே.
- மாணவர்கள் உயர் தொழில்நுட்ப ஆய்வகத்திற்குள் நுழைதல் (5 நிமிடங்கள்), ஒரு நிமிட வழிகாட்டி காணொளியை பார்த்தல், Baseline Assessmentல் உள்ள பத்து வினாக்களுக்கு பதில் அளித்தல் (15 நிமிடங்கள்), அதன்பின் மீண்டும் Login செய்து "Speak with Me" என்ற AI Toolஐ பயன்படுத்துதல் (15 நிமிடங்கள்), அதன் பின் Logout செய்தல் (5 நிமிடங்கள்) ஆகியவற்றுக்கு என மொத்தம் 40 நிமிடங்கள் ஒரு Batchக்கு *(உயர்நிலைப் பள்ளி எனில் 10 மாணவர்கள், மேல்நிலைப் பள்ளி எனில் 20 மாணவர்கள்)* சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் மூலம் ஒதுக்கப்பட வேண்டும்.
- இந்த மொழிகள் ஆய்வகத்தின் மூலம் மாணவர்களுக்கு நடத்தப்படும் Baseline Assessmentஐ அனைத்து உயர் தொழில்நுட்ப ஆய்வகம் (Hi-Tech Lab) உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலக் கூடிய அனைத்து மாணவர்களும் 12.02.2024 முதல் 20.02.2024 வரை உள்ள ஏழு வேலை நாட்களுக்குள் தவறாது பங்கேற்றல் வேண்டும். இதனை 6 முதல் 8ஆம் வகுப்பு வரை English கற்பிக்கும் ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
- அதன்படி 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலக் கூடிய அனைத்து மாணவர்களும் இந்நிகழ்வில் குழுக்களாக பங்கேற்க ஏதுவாக சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளியில் உள்ள Thin Clinetகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மாணவர்களை குழுக்களாக பிரித்து நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 6 Batch உள்ளவாறு நாட்களின் எண்ணிக்கையினை *(அதிகபட்சமாக 7 வேலை நாட்கள் மட்டுமே)* முன்கூட்டியே திட்டமிட்டு சார்ந்த 6 முதல் 8ஆம் வகுப்பு வரை English கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.

- பள்ளித் தலைமை ஆசிரியர்களால் வழங்கப்படும் Scheduleக்கு ஏற்றவாறு 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலக் கூடிய அனைத்து மாணவர்களும் இந்நிகழ்வில் குழுக்களாக பங்கேற்பதை சார்ந்த 6 முதல் 8ஆம் வகுப்பு வரை English கற்பிக்கும் ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
- மாணவர்கள் அனைவரும் Baseline Assessmentஐ முழுமையாக நிறைவு செய்து Submit Buttonஐ Click செய்துள்ளார்களா என்பதனை சார்ந்த 6 முதல் 8ஆம் வகுப்பு வரை English கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது உறுதி செய்தல் வேண்டும். இந்நிகழ்வினை தினம்தோறும் சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கண்காணித்தல் வேண்டும்.
- மேற்குறிப்பிட்டுள்ளவாறு பள்ளிகளில் மொழிகள் ஆய்வக Baseline Assessment உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடைபெறுவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை), ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் உதவித் திட்ட அலுவலர்கள் (APO – DPO), மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (Language Lab) மற்றும் சார்ந்த பள்ளிகளின் ஆசிரிய பயிற்றுநர்கள் கண்காணித்தல் வேண்டும்.
- உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 100 Mbps Speed Internet - Configuration பணியினை மேற்கொள்ளாத பள்ளிகளில் இப்பணியினை விரைந்து முடித்து மொழிகள் ஆய்வக Baseline Assessment நிகழ்வினை முழுமையாக நிறைவு செய்ய சார்ந்த பள்ளிகளுக்கு தொடர் வழிகாட்டுதல்களை வழங்கும் பணியினை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (Hi-Tech Lab) அடங்கிய மாவட்ட அளவிலான ICT குழு மேற்கொள்ள வேண்டும்.

**************